**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெருந்துறை**

**முன்னிலை : திரு.என்.மூர்த்தி, B.Com.,B.L.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பெருந்துறை**

**2026 ம் வருடம் ஜுன் திங்கள் 30 ம் நாள் செவ்வாய் கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 16 ம் நாள்**

**ஆண்டுப் பட்டியல் வழக்கு எண். 8/2020**

CNR No. TNED120000712020

அரசுக்காக : சிறப்பு உதவி ஆய்வாளர், பெருந்துறை

காவல் நிலைய குற்ற எண். 793/2015

இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 324, 506(ii). ... குற்றம் முறையிடுபவர்

-எதிர்-

1. மகேஷ் (28/2015)

த/பெ. ராமசாமி,

ஜீவா நகர், ஈரோடு ரோடு,

பெருந்துறை,

2. கௌதம் (25/2015)

த/பெ. சங்கமேஸ்வரன்,

23/7, ஜீவா நகர், பெருந்துறை, .... குற்றம் சாட்டப்பட்டவர்கள்

CASE SUMMARY

RULE 106 of CRP

| S.No | PARTICULARS | |
|---|---|---|
| 01 | Name of the Parties-Complainant : Special Sub Inspector of Police, Perundurai Police Station, Erode (Dt).<br>Accused : 1. Mahesh, S/o. Ramasamy<br>2. Gowtham, S/o. Sangameshwaran | |
| 02 | Accused Age | A1 - 28 years.<br>A2 - 25 years. |
| 03 | Father's Name/W/o./D/o. | A1 – S/o.Ramasamy<br>A2 – S/o.Sangameshwaran |
| 04 | Caste or Religion | -- |
| 05 | Calling | A1 - --<br>A2 - Manager |
| 06 | Residence | A1 - Jeeva Nagar, Erode Road, Perundurai.<br>A2 - 23/7, Jeeva Nagar, Perundurai. |
| 07 | Taluk | A1, A2 - Perundurai |
| 08 | Date of Occurrence | 23.10.2015 |
| 09 | Date of filing | 23.01.2020 |
| 10 | Apprehension - Arrest | A1 – 03.011.2015 - Anticipatory bail |



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:13:44 +0530

| | | |
|---|---|---|
| | | A2 - 24.10.2015 |
| 11 | Release on bail | A1 – 03.011.2015 - Anticipatory bail<br>A2 – 05.11.2015 |
| 12 | Commitment | Not Applicable |
| 13 | Commencement of Trial | 15.06.2020 |
| 14 | Closure of Trial | 16.06.2026 |
| 15 | Sentence of Order | Acquittal A1 – U/s. 294(b), 506(ii) of IPC.<br>A2 - U/s. 294(b), 342, 506(ii) of IPC.<br>Convicted A1 - U/s.324 IPC. |
| 16 | Service of copy of Judgment | Yes |
| 17 | **<u>Case Summary</u> :** Period of Remand of the accused | A1 – 03.011.2015 - Anticipatory bail<br>A2 – 24.10.2015 – 05.11.2015 |
| 18 | Date of filing of the final report | 23.01.2020 |
| 19 | Date of Questioning under section 240 of Cr.P.C., | 19.03.2020 |
| 20 | Date of examination accused u/s.313(1)(b) of Cr.P.C., | 06.06.2026 |
| 21 | Miscellaneous Petition and their results | -- |
| 22 | Date of examination in Chief and Cross | (see below) |
| 23 | Details of abscondence of accused his appearance/ Production | Nil |
| 24 | Grant of stay by Superior Court and the results thereof | Nil |

| WITNESS | CHIEF | CROSS |
|---|---|---|
| PW1 | 08.07.2025 | 08.07.2025 |
| PW2 | 08.07.2025 | 08.07.2025 |
| PW3 | 08.07.2025 | 08.07.2025 |
| PW4 | 08.07.2025 | 08.07.2025 |
| PW5 | 08.07.2025 | 08.07.2025 |
| PW6 | 23.09.2025 | 23.09.2025 |
| PW7 | 19.11.2025 | 19.11.2025 |
| PW8 | 04.03.2026 | 04.03.2026 |
| PW9 | 03.06.2026 | 03.06.2026 |

இந்த வழக்கு 23.01.2020 அன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை கற்றறிந்த வழக்குரைஞர் செல்வி. P. ஜெயந்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.T. கார்த்திக் அவர்கள் முன்னிலையாகியும் வழக்காடியதில் இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு கோப்புகள் மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:13:50 +0530

## தீர்ப்புரை

கடந்த 23.10.2015 ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் பெருந்துறை காவல் நிலைய சரகம், பீரங்கி மேட்டில் அ.சா.1 சக்தி என்பவரின் வீட்டுக்கு சிறிது தூரத்தில் அ.சா.1 அவரிடம் கட்டிட வேலை செய்யும் இந்திகாரப்பையனிடம் ரோட்டின் ஓரம் நின்று பேசிக் கொண்டிருக்கும்போது அவ்வழியாக பைக்கில் வந்த எதிரிகள் இருவரும் பைக்கை நிறுத்திவிட்டு அ.சா.1 யை பார்த்து ஏண்டா தாயோழி ரோட்டை மறுச்சு நின்னுதான் பேசுவீங்களா ஓரமா நின்னு பேச முடியாதா என தகாத வார்த்தையால் திட்டி, எதிரிகள் அ.சா.1 யை கீழே தள்ளியதாகவும், அ.சா.1 எழுந்து 2 ம் எதிரியை பிடிக்க 2 ம் எதிரி அ.சா.1 ன் பின்னால் சென்று தோள்பட்டையை இழுத்து பிடித்து கொண்டிருந்தபோது 1 ம் எதிரி கீழே கிடந்த 2 கல்லை எடுத்து வலது கையில் வைத்திருந்த கல்லால் அ.சா.1 ன் தலையின் வலது புறம் அடித்து சொற்பகாயத்தையும், இடது கையில் வைத்திருந்த கல்லால் அ.சா.1 ன் இடது காதில் அடித்து சொற்பகாயத்தையும் ஏற்படுத்தி, எதிரிகள் இருவரும் அ.சா.1 யை பார்த்து எங்ககிட்ட வச்சுக்கிட்ட உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதனால் 1 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் படியும், 2 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் படியும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என பெருந்துறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) பெருந்துறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை படி 1 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் படியும், 2 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் படியும் இவ்வழக்கு கோப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

3) எதிரிகள் முன்னிலையானவுடன் அவர்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207(1)ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு 1 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் படியும், 2 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன்



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:13:57 +0530

படியும் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் குற்றத்தை பற்றி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசுத் தரப்பில் சாட்சிகளை விசாரிக்க இந்த வழக்கில் வகை செய்யப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசுத் தரப்பில் சாட்சிய பட்டியலில் கண்ட 10 சாட்சிகளில் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஒரு சாட்சியை அரசுத்தரப்பு வழக்கறிஞர் சாட்சிய விசாரணையிலிருந்து விலக்கியுள்ளார். அரசுத் தரப்பில் சான்றாவணம் 1 முதல் 7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்று பொருள்கள் இரண்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

**<u>5) அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

5.1) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சக்தி என்பவர் பீரங்கி மேடு, கொங்கு காரேஜ் ரோடு, பெருந்துறையில் குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு கட்டிட மேஸ்திரியாக வேலை செய்து வருவதாகவும், கடந்த 23.10.2015 ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் அ.சா.1 சக்தியின் வீட்டுக்கு சிறிது தூரத்தில் அ.சா.1 அவரிடம் கட்டிட வேலை செய்யும் இந்திகாரப்பையனிடம் ரோட்டின் ஓரம் நின்று பேசிக் கொண்டிருக்கும்போது அவ்வழியாக பைக்கில் வந்த எதிரிகள் இருவரும் பைக்கை நிறுத்திவிட்டு அ.சா.1 யை பார்த்து ஏண்டா தாயோழி ரோட்டை மறுச்சு நின்னுதான் பேசுவீங்களா ஓரமா நின்னு பேச முடியாதா என தகாத வார்த்தையால் திட்டி, எதிரிகள் அ.சா.1 யை கீழே தள்ளியதாகவும், அ.சா.1 எழுந்து 2 ம் எதிரியை பிடிக்க 2 ம் எதிரி அ.சா.1 ன் பின்னால் சென்று தோள்பட்டையை இழுத்து பிடித்து கொண்டிருந்தபோது 1 ம் எதிரி கீழே கிடந்த 2 கல்லை எடுத்து வலது கையில் வைத்திருந்த கல்லால் அ.சா.1 ன் தலையின் வலது புறம் அடித்து சொற்பகாயத்தையும், இடது கையில் வைத்திருந்த கல்லால் அ.சா.1 ன் இடது காதில் அடித்து சொற்பகாயத்தையும் ஏற்படுத்தியபோது அ.சா.1 சத்தம் போட்டதால் சம்பவத்தை பார்த்த அ.சா.1



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:04 +0530

மனைவியான அ.சா.2 ம், அவரது மச்சான் அ.சா.4 ரவி மற்றும் சிலரும் ஓடி வருவதைப் பார்த்து, எதிரிகள் இருவரும் அ.சா.1 யை பார்த்து எங்ககிட்ட வச்சுக்கிட்ட உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து ஓடியுள்ளார்கள். பின்னர் அ.சா.1 சக்தி கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடம் வந்த அ.சா.7 வேலுச்சாமி என்பவர் அ.சா.1 யை மாலை சுமார் 6.35 மணியளவில் பெருந்துறை அரசு மருத்துவமனையில் சேர்த்து அங்கு அ.சா.1 உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

5.2) பின்னர் கடந்த 24.10.2015 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.9 திரு.கிருஷ்ணராஜ் என்பவர் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது பெருந்துறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பெற்று பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 சக்தி என்பவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்று காவல் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண். 793/2015 சட்டபிரிவுகள் 294(b), 342, 324, 506(2)ன் படி அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

5.3) பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.9 திரு.கிருஷ்ணராஜ் அவர்கள் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 24.10.2015 ம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் சம்பவ இடம் சென்று பார்வை மகசர் சாட்சிகள் அ.சா.5 வெங்கடேஷ் மற்றும் சாட்சி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் வரைந்து அ.சா.ஆ.2 பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து கையொப்பங்களை பெற்றுள்ளார். பின்னர் சம்பவ இடத்தில் இருந்து அ.சா.பொ.1 இரத்தக்கறை படிந்த கிழிந்த நிலையில் வெள்ளை கலரில் பச்சை, கருப்பு கலர் கட்டம் போட்ட அரக்கை சட்டை - 1, அ.சா.1 யை அடிக்க 1 ம் எதிரி பயன்படுத்திய அ.சா.பொ.2 இரத்தக்கறை படிந்த கைக்கு அடிக்கமான கற்கள் - 2



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:12 +0530

ஆகியவற்றை மேற்படி சாட்சிகளான சாட்சிகள் அ.சா.5 வெங்கடேஷ் மற்றும் சாட்சி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பங்களை பெற்றுள்ளார். பின்னர் அ.சா.5 வெங்கடேஷ் மற்றும் சாட்சி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.3 ஆறுமுகம், அ.சா.4 ரவி, அ.சா.5 வெங்கடேஷ், அ.சா.6 அய்யப்பசாமி, அ.சா.7 வேலுச்சாமி, அ.சா.5 வெங்கடேஷ் ஆகியோரை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்துள்ளார்.

5.4) பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.9 திரு.கிருஷ்ணராஜ் அவர்கள் சம்பவ இடத்திலிருந்து புறப்பட்டு பெருந்துறை அரசு மருத்துவமனை சென்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த அ.சா.1 சக்தி மற்றும் உடன் இருந்த அவரது மனைவி அ.சா.2 விஜயா ஆகிய இருவரையும் விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்துள்ளார். பின்னர் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததின் பேரில் எதிரிகளை தேடி வரும் போது இடையில் கிடைத்த தகவலின் பேரில் பெருந்துறை வண்ணாம்பாறை பஸ் ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த 2ம் எதிரியை உடன் வந்த சாட்சி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க தானாக முன் வந்து தன் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் 24.10.2015ம் தேதி பகல் 11.30 மணியளவில் 2ம் எதிரியை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவிக்கப்பட்டு பின்னர் அன்றையதினமே 2ம் எதிரியை அடைப்புக் காவல் அறிக்கையின் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5.5) பின்னர் 1ம் எதிரியை தேடி வந்த நிலையில் 1ம் எதிரியானவர் அ.சா.1 சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய நிலையில் ஈரோடு முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை மனு தாக்கல் செய்து 02.11.2015ம் தேதி நீதிமன்ற முன் பிணையில் சென்றுள்ளார். பின்னர் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிய வழக்கு சொத்துகளான அ.சா.பொ.1 இரத்தக்கறை படிந்த கிழிந்த



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:18 +0530

நிலையில் வெள்ளை கலரில் பச்சை, கருப்பு கலர் கட்டம் போட்ட அரக்கை சட்டை - 1, அ.சா.பொ.2 இரத்தக்கறை படிந்த கைக்கு அடிக்கமான கற்கள் - 2 ஆகியவற்றை அ.சா.ஆ.7 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். பின்னர் அ.சா.1 சக்திக்கு சிகிச்சை அளித்த பெருந்துறை அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. பிரேம் நவாஸ் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.4 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று அவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.9 திரு.கிருஷ்ணராஜ் அவர்கள் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி எதிரிகளிடம் கேட்டல்**

அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் பகுதிகளைத் தொகுத்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)ன் படி வினவியபோது எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சியத்தை பொய் என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**7) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

அரசுத் தரப்பில் 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் படியும், 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் படியும் குற்றச்சாட்டானது தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பது குறித்து இந்நீதிமன்றத்தில் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

**8) பிரச்சனைக்குரிய தீர்வு :**

8.1) இரு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள், வழக்கு கோப்புகள் மற்றும் வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

8.2) அரசு தரப்பில் கடந்த 23.10.2015ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் பெருந்துறை காவல் நிலைய சரகம், பீரங்கி மேட்டில் அ.சா.1 சக்தி என்பவரின் வீட்டுக்கு சிறிது தூரத்தில் அ.சா.1



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:24 +0530

அவரிடம் கட்டிட வேலை செய்யும் இந்திகாரப்பையனிடம் ரோட்டின் ஓரம் நின்று பேசிக் கொண்டிருக்கும்போது அவ்வழியாக பைக்கில் வந்த எதிரிகள் இருவரும் பைக்கை நிறுத்திவிட்டு அ.சா.1யை பார்த்து ஏண்டா தாயோழி ரோட்டை மறுச்சு நின்னுதான் பேசுவீங்களா ஓரமா நின்னு பேச முடியாதா என தகாத வார்த்தையால் திட்டி, எதிரிகள் அ.சா.1யை கீழே தள்ளியதாகவும், அ.சா.1 எழுந்து 2ம் எதிரியை பிடிக்க 2ம் எதிரி அ.சா.1ன் பின்னால் சென்று தோள்பட்டையை இழுத்து பிடித்து கொண்டிருந்தபோது 1ம் எதிரி கீழே கிடந்த 2 கல்லை எடுத்து வலது கையில் வைத்திருந்த கல்லால் அ.சா.1ன் தலையின் வலது புறம் அடித்து சொற்பகாயத்தையும், இடது கையில் வைத்திருந்த கல்லால் அ.சா.1ன் இடது காதில் அடித்து சொற்பகாயத்தையும் ஏற்படுத்தி, எதிரிகள் இருவரும் அ.சா.1யை பார்த்து எங்ககிட்ட வச்சுக்கிட்ட உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பில் எதிரிகள் மீது இவ்வழக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

8.3) கற்றறிந்த அரசுத் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரிகள் தண்டிக்கதக்க குற்றவாளிகள் என எடுத்துரைத்தார். எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று அரசுத் தரப்பு சாட்சியத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி சாட்சியம் அளிக்கப்படவில்லை என எடுத்துரைத்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

8.4) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.1 முதல் விசாரணையில் 23.10.105ம் தேதி மாலை 5.30 மணியிலிருந்து 6.00 மணியளவில் வேலுச்சாமி என்பவர் வீட்டில் கட்டிட வேலை செய்து வந்த போது கட்டிட வேலை செய்யும் ஹிந்திக்கார பையனிடம் பேசிக் கொண்டிருந்ததாகவும், மேற்கிலிருந்து கிழக்காக இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும், பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டதில் அவர்களது



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:30 +0530

பெயர் கௌதம் மற்றும் மகேஷ் என்று தெரிந்து கொண்டதாகவும், அவர்கள் ஆஜர் எதிரிகள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8.5) ஆஜர் எதிரிகள் இருவரும் ரோட்டில் நின்று பேசிக் கொண்டிருக்கிறாய் தாயோலி என்று தகாத வார்த்தை சொல்லி திட்டியதாகவும், அ.சா.1 தள்ளித்தான் நிற்கிறேன் எதற்காக தகாத வார்த்தையால் திட்டுகிறீர்கள் என்று கேட்டதாகவும், 2ம் எதிரி கௌதம் எதிர்த்து பேசுகிறாயா என்று தள்ளிவிட்டதாகவும், 1ம் எதிரி மகேஷ் தாயோலி உன்னை கொல்லாமல்விடமாட்டேன் என்று கல்லால் அ.சா.1 தலையில் இருபக்கத்திலும் அடித்துவிட்டார் என்றும், அவ்வாறு அடித்ததில் வலது பக்கம் மண்டையிலும், இடது பக்க காதிலும் ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8.6) மேலும் வேலுச்சாமியும், அ.சா.1 மனைவியும், அவரது மச்சான் இன்னும் வருவதைப் பார்த்து ஆஜர் எதிரிகள் வண்டியில் சென்றுவிட்டதாகவும், வேலுச்சாமி என்பவர் பெருந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், சிகிச்சையில் இருந்த போது மறுநாள் பெருந்துறை போலீசார் புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அ.சா.1யை அடிக்க பயன்படுத்திய கல்லை அடையாளம் காட்ட முடியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.7) எதிரிகள் மீதான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1யை எதிரிகள் இருவரும் ரோட்டில் நின்று பேசிக் கொண்டிருக்கிறாய் தாயோலி என்று கெட்ட வார்த்தை பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 தகாத வார்த்தை பேசியதால், தனக்கு மற்றவர்கள் முன்னிலையில் அவமானம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு கூறவில்லை.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:38 +0530

8.8) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2 முதல் அ.சா.5 சாட்சிகள் அ.சா.1யை தகாத வார்த்தை பேசியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. அ.சா.6 தனது சாட்சியத்தில் சக்தியை மகேஷ் மற்றும் கௌதம் தகாத வார்த்தை பேசியதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார், என்ன கெட்ட வார்த்தையால் பேசினார்கள் என்று சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

**HON'BLE SUPREME COURT OF INDIA**

**M.S. MADHANAGOPAL & ANR. vs. K. LALITHA 2022 -Livelaw(SC) – 844**

**Crl A 1759/2022 Dated 10.10.2022**

It has to be noted that in the instance case, the absence of words which will involve some lascivious elements arousing sexual thoughts or feelings or words cannot attract the offence under Section 294(b). None of the records disclose the alleged words used by the accused. It may not be the requirement of law to reproduce in all cases the entire obscene 4 words if it is lengthy, but in the instant case, there is hardly anything on record. Mere abusive, humiliating or defamative words by itself cannot attract an offence under Section 294(b) IPC. To prove the offence under Section 294 of IPC mere utterance of obscence words are not sufficient but there must be a further proof to establish that it was to the annoyance of others, which is lacking in the case.

எதிரிகள் அ.சா.1யை தகாத வார்த்தையால் திட்டியதால் தனக்கு மற்றவர்கள் முன்னிலையில் அவமானம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b) கீழான உட்கூறுகள் எதுவும் இல்லை. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b) எதிரிகளை தண்டிக்க முடியாத என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.9) எதிரிகள் மீதான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், 1ம் எதிரி மகேஷ் தாயோலி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:43 +0530

8.10) அ.சா.2 அவருடைய முதல் விசாரணையில் **"ஆஜர் எதிரிகள் இருவரும் என் கணவரை அடித்துவிட்டதாக என்னிடம் என் பக்கத்து வீட்டில் கூடியிருக்கும் நபர் சொல்லியதன் பேரில் நான் வந்து பார்த்தபோது என் கணவரின் சட்டையும், முகம் முழுவதும் ரத்தமாக இருந்தது"** என சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 அவருடைய முதல் விசாரணையில் **"25.10.2015 ம் தேதி மாலை 5 மணியிலிருந்து 5.30 மணி இருக்கும், நானும் என் உறவினர்களும் நின்று பேசிக் கொண்டு இருந்தபோது சத்தம் கேட்டது. என்ன சத்தம் என்று பார்க்க சென்றோம். மேலும் நான் போகும்போது ஆஜர் எதிரிகள் என்ன கூறு சென்றார்கள் என்று எனக்கு தற்போது நினைவில் இல்லை"** என சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகிய கண்ணுற்ற சாட்சிகளும் அ.சா.1 யை எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை.

Hon'ble Supreme Court of India

Manik Taneja and another Vs. State of Karnataka and another

2015 [7] SCC 423

"Threat must be intention to cause alarm to the complainant to cause that person to do or omit to do any work. Mere expressions of any words, without any intention to cause alarm would not be sufficient to bring in the application of this Section.

மேற்கண்ட முன் தீர்ப்பின்படி மாண்பமை உச்சநீதிமன்றமானது பயமுறுத்தும் நோக்கம் இன்றி வெறும் வார்த்தைகளின் வெளிப்பாடுகள் மட்டும் இந்த பிரிவை பயன்படுத்த போதுமானதாக இருக்காது என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 ன் சாட்சியத்தினை பரிசீலனை செய்கையில் அ.சா.1 க்கு மரண பயத்தை எதிரிகள் ஏற்படுத்தியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 503 கீழான உட்கூறுகள் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:48 +0530

8.11) 2 ம் எதிரி மீதான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 342 ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில்,

இந்திய தண்டனை சட்டம் பிரிவு 342 பிரிவுக்கு, பிரிவு 340 வரையறை தருகிறது.

340. Wrongful confinement.—Whoever wrongfully restrains any person in such a manner as to prevent that person from proceedings beyond certain circumscribing limits, is said "wrongfully to confine" that person.

Illustrations

(a) A causes Z to go within a walled space, and locks Z in Z. is thus prevented from proceeding in any direction beyond the circumscribing line of wall. A wrongfully confines Z.

(b) A places men with firearms at the outlets of a building, and tells Z that they will fire at Z if Z attempts to leave the building. A wrongfully confines Z.

இந்திய தண்டனை சட்டம் பிரிவு 342 இன் கீழான குற்றச்சாட்டினை பரிசீலனை செய்யும் பிரிவு 340 இல் வழங்கப்பட்டுள்ள wrongful confinement என்பதற்கான வரையறையை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதன்படி ஒரு நபர் குறிப்பிட்ட எல்லையை தாண்டி செல்ல முடியாதவாறு முறையற்ற வகையில் தடுத்து நிறுத்தினால் மட்டுமே wrongful confinement ஆகும். இவ்வழக்கில், 2 ம் எதிரி அ.சா.1 யை குறிப்பிட்ட எல்லைக்குள் அடைத்து வைத்து அவர் அங்கிருந்து வெளியே செல்ல முடியாதவாறு முறையற்ற வகையில் தடுத்தார் என்பதற்கான எவ்வித சாட்சியத்தையும் அ.சா.1 அளிக்கவில்லை. மேலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறப்படும் கண்ணுற்ற சாட்சிகளும் 2 ம் எதிரி அ.சா.1 யை முறையற்ற வகையில் தடுத்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

8.12) எனவே இந்திய தண்டனை சட்டம் பிரிவு 340 வரையறுக்கப்பட்டுள்ள wrongful confinement என்ற குற்றச்சாட்டு அத்தியாவசிய உட்கூறுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளது ஆகையால் 2 ம் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:14:54 +0530

342 கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டை நிரூபிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.13) 1ம் எதிரி மீதான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 324 ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில் **"1ம் எதிரி கல்லால் என்னை தலையில் இருபக்கத்திலும் அடித்துவிட்டார். அவ்வாறு அடித்தது வலது பக்க மண்டையில் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது. இடது பக்க காதில் ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது. மேலும் என்னை வேலுசாமி மற்றும் என் மனைவி பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்து சேர்த்தார்கள்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.14) அ.சா.8 காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஆவார். அ.சா.8 முதல் விசாரணையில் **"கடந்த 23.10.2015 ம் தேதி மாலை 6.35 மணியளவில் நான் பெருந்துறை அரசு மருத்துவமனையில் முதன்மை குடுமை மருத்துவராக பணிபுரிந்தபோது அய்யாவு என்பவரது மகன் சக்தி வயது 42. கொங்கு காலேஜ் ரோடு, பீரங்கி வீதி என்ற விலாசத்தில் வசிக்கும் நபரை வேலுச்சாமி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை பரிசோதித்தபோது அவர் தன்னை 23.10.2015 மாலை 5.30 மணியளவில் மூன்று தெரியாத நபர்கள் தன்னை கற்களால் இடது தோள்பட்டையில், வலதுபின் தலையில், இடதுகாது அருகில் தாக்கியதாக கூறினார்கள். அவர்களுக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. கிழிந்த காயம் வலது பின் தலையில் 3 x 3 cm. 2) கிழிந்த காயம் இடது காது அருகில் 2 x 2 cm. 3) ரத்த கட்டு வலது தோள்பட்டையில் 3 × 3 cm. அவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது".**

8.15) மேலும் **"24.10.2015 காலை 11.30 மணியளவில் அவரை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிடி ஸ்கேன் பார்க்க அனுப்பட்டப்பட்டது. சிடி ஸ்கேன் ரிப்போர்ட் நார்மல்.**



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:15:00 +0530

**அவருக்கு மறுபடியும் பெருந்துறை அரசு மருத்துவமைனயில் உள்நோயாளியாக அட்மிஷன் வேண்டும் என்று கேட்டார்கள். 24.10.2015 ம் தேதி மாலை 6.15 மணியளவில் அவருக்கு உள்நோயாளியாக அட்மிஷன் செய்யப்பட்டது. 28.10.2015 மதியம் 1.45 மணியளவில் டிச்சார்ஜ் செய்யப்பட்டார். அவர் மீண்டும் 02.11.2015 மதியம் 12.55 பெருந்துறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். அவர் தனக்கு காது வலி இருப்பதாக கூறினார். 03.11.2015 காலை 9.30 மணியளவில் அவரை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு காது, மூக்கு, தொண்டை மருத்துவரிடம் ஒப்பினீயனுக்காக அனுப்பப்பட்டார். ஆனால் அவர் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. 05.11.2015 குகன் ENT ஆஸ்பிட்டல் சிகிச்சை பெற்ற சான்று கொண்டு வந்தார். அதில் அவருக்கு இடது காதில் வலியும், இடது தாடையில் வலியும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது".**

8.16) எதிரி தரப்பில் விபத்து பதிவேட்டில் மூன்று நபர்கள் அடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் இரண்டு நபர்கள் மீது மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.ஆ.4 விபத்து பதிவேட்டிற்கும், அரசு தரப்பு வழக்கும் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றும், எனவே வழக்கில் இருந்து 1ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

Hon’ble Supreme Court of India

B. Bhadriah v. State of A.P., 1995 Supp (1) SCC 262

5... The casual way of filling up the column in the medical certificate does not in any manner amount to recording a statement of the injured witness.

அ.சா.ஆ.4-ல் உள்ள பதிவு தொடர்பாக காணப்படும் இத்தகைய சிறிய அளவிலான வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள், அரசு தரப்பின் வழக்கின் மையக் கருவையே பாதிக்கும் வகையிலான



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:15:07 +0530

முக்கியமான முரண்பாடுகளாகக் கருதப்பட முடியாது. எனவே, இக்காரணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அரசு தரப்பின் வழக்கை நிராகரிக்க இயலாது.

8.17) எதிரிகள் தரப்பில், இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், அ.சா.1 சாட்சியத்தை மட்டும் கொண்டு சம்பவம் நடந்ததாக சொல்ல முடியாது என்றும், எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது, அ.சா.2 சாட்சி அ.சா.1ன் மனைவி ஆவார். அவருடைய முதல் விசாரணையில் **"பார்த்தபோது என் கணவரின் சட்டையும், முகம் முழுவதும் ரத்தமாக இருந்தது. என் கணவர் சம்பவத்தன்று அணிந்திருந்த ரத்தம் தோய்ந்த சட்டை இதுதான். வெள்ளை கலரில் பச்சை கோடு போட்ட சட்டையாகும்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். சட்டை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.18) அ.சா.3 முதல் விசாரணையில் **"அ.சா.1 சக்திக்கு தலையில் ரத்தம் வழிய ஆஜர் எதிரி இருவர்களுடனும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். ஆஜர் எதிரி இருவரும் அ.சா.1 சக்தியை கல்லால் அடித்ததில் ரத்தக்காயம் ஏற்பட்டதை நான் பார்த்தேன்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 சம்பவ இடத்தை படம் வரைந்தது பற்றியும், வழக்கு சொத்தான இரண்டு கற்களை போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.3 ஆகவும், இரண்டு கற்கள் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.19) அ.சா. 6 முதல் விசாரணையில் **"மகேஷ் என்பவர் குழிதோண்டி போட்டு இருந்த கல்லை எடுத்து சக்தியை வலது பக்கம் மண்டையிலும், இடது காதிலும் அடித்துவிட்டார். ஆஜர் 1ம் எதிரி மகேஷ் ஆவார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்கள் ஒன்று கொண்டு தொடர்புடையவையாகவும், ஒத்தேற்பு சாட்சியாகவும் அமைந்துள்ளது தெரிய வருகிறது.

N MOORTHY
Digitally signed by N MOORTHY
Date: 2026.06.30 18:15:12 +0530

**Hon’ble Supreme Court**

**State Of Madhya Pradesh vs Mansingh And Ors.- (2003) 10 SCC 414** என்ற வழக்கில்,

"The evidence of injured witnesses have greater evidentiary value and unless compelling reasons exist, their statements are not to be discarded lightly."

**Hon’ble Supreme Court**

**Abdul Sayeed Vs. State of Madhya Pradesh 2010 (10) SCC 259**

Para ”28. The law on the point can be summarized to the effect that the testimony of the injured witness is accorded a special status in law. This is as a consequence of the fact that the injury to the witness is an in-built guarantee of his presence at the scene of the crime and because the witness will not want to let his actual assailant go unpunished merely to falsely implicate a third party for the commission of the offence. Thus, the deposition of the injured witness should be relied upon unless there are strong grounds for14 rejection of his evidence on the basis of major contradictions and discrepancies therein

மேற்கண்ட மாண்புமிகு உச்ச நீதிமன்ற இரண்டு வழக்குகளின் தீர்ப்பின்படி காயம்பட்ட சாட்சிக்கு தகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அ.சா.1ன் சாட்சியம், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம், அ.சா.ஆ.4 விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ், அ.சா.2, அ.சா3, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியவர்களின் சாட்சியங்கள் ஆகியவைகள் ஒன்றுக்கொன்று ஒத்திசைவாகவும், அரசு தரப்பின் வழக்கை உறுதிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன. எனவே, அ.சா.1ன் சாட்சியம் நம்பத்தகுந்ததாக இந்நீதிமன்றம் ஏற்கிறது.

8.20) அ.சா.9 புலன் விசாரணை அதிகாரியாவார். அ.சா.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், புலன் விசாரணை செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் ஒருநாள் காலதாமதமாக பெறப்பட்டது என்றும், மருத்துவரை ஏழு மாதம் கழித்து விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், காலதாமதத்திற்கான காரணம் விளக்கப்படவில்லை என்றும் எதிரி தரப்பில் வாதிடப்பட்டது.

8.21) அந்த காலதாமதம் மட்டுமே அரசு தரப்பு வழக்கின் அடிப்படை உண்மைத்தன்மையை பாதிப்பதாகக் கருத இயலாது. அவ்வாறான காலதாமதத்தால் எதிரிகள் தரப்பிற்கு ஏதேனும் பாதிப்பு



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:15:18 +0530

ஏற்பட்டது அல்லது அரசு தரப்பு வழக்கு ஜோடிக்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் எந்த ஆதாரமும் முன்வைக்கப்படவில்லை. இவ்வாறான விசாரணைக் குறைப்பாடு மட்டும் அரசு தரப்பு வழக்கை நிராகரிக்க போதுமான காரணமாக கருத முடியாது. எனவே 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 324ன் படியான குற்றச்சாட்டை 1ம் எதிரிக்கு எதிராக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது

8.22) இந்திய தண்டனை சட்டம் பிரிவு 324ன் கீழ் தண்டிக்கும் போது 3 ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும். மேற்கண்டபடி அரசு தரப்பில் 1ம் எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 506(ii)ன் கீழும், 2ம் எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் கீழுமான குற்றச்சாட்டுகளை தக்க சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்தும், அதே சமயத்தில் 1ம் எதிரிக்கு எதிராக முன் வைக்கப்பட்ட இ.த.ச. பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.23) ஆதலால் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன் வைத்துபோல் 1ம் எதிரி இதச பிரிவுகள் 294(b), 506(ii)ன் படியும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் படியும் குற்றவாளிகள் இல்லை எனவும், 1ம் எதிரி இதச பிரிவு 324-ன் படி குற்றவாளி எனவும் இந்த நீதிமன்றம் கருதுகிறது.

8.24) 1ம் எதிரியை மேற்படி சட்டப் பிரிவு 324ன் படி குற்றவாளி என தீர்மானித்துள்ளதால் 1ம் எதிரிக்கு வழங்கபோகும் தண்டனை குறித்து குவிமுச பிரிவு 248(2)ன் படி வினவிய 1ம் எதிரி பின் வருமாறு முன் வைத்தார்.

**எனக்கு வயதான அப்பாவும், அம்மாவும் உள்ளார்கள். எனவே அபராதம் மட்டும் விதித்து வழக்கை முடித்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

N MOORTHY
Digitally signed by N MOORTHY
Date: 2026.06.30 18:15:23 +0530

8.25) 1ம் எதிரி முன் வைத்த மேற்படி சங்கதிகளை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்தும், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் பார்க்கையில் இந்த நீதிமன்றம் 1ம் எதிரிக்கு பின் வருமாறு தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கிறது.

**9)இறுதியாக,**

i) 1ம் எதிரி இதச பிரிவுகள் 294(b), 506(ii)ன் கீழும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 506(ii)ன் கீழும் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்தும், 1ம் எதிரி இதச பிரிவு 324ன் கீழான குற்றச்சாட்டுக்குண்டான குற்றத்திற்கு குற்றவாளி என தீர்மானித்து 1ம் எதிரிக்கு இதச பிரிவு 324ன் படியான குற்றத்திற்கு அபராதம் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) விதித்தும் கு.வி.மு.ச பிரிவு 248(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. அபராதத் தொகையை 1ம் எதிரி கட்டத் தவறினால் 1ம் எதிரிக்கு ஒரு வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராத தொகை ரூ.5000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்).

ii) எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப் பத்திரங்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

iii) வழக்கு சொத்துக்கான அ.சா.பொ.1 இரத்தக்கறை படிந்த கிழிந்த நிலையில் வெள்ளை கலரில் பச்சை, கருப்பு கலர் கட்டம் போட்ட அரக்கை சட்டை - 1, அ.சா.பொ.2 இரத்தக்கறை படிந்த கைக்கு அடிக்கமான கற்கள் - 2 ஆகியவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பி.ஆர்.எண்.32/2016 என்ற எண்ணில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேல் முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி நடக்கவும், மேல் முறையீடு இல்லையெனில் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழித்துவிடவும் உத்தரவிடப்படுகிறது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:15:28 +0530

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 30 ம் நாள் இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:15:32 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.

**அரசு தரப்பு சாட்சிகள்**:-

அ.சா.1 – திரு. சக்தி

அ.சா.2 – திருமதி.விஜயா

அ.சா.3 – திரு. ஆறுமுகம்

அ.சா.4 – திரு. ரவி

அ.சா.5 – திரு. வெங்கடேஷ்

அ.சா.6 –திரு. அய்யப்பசாமி

அ.சா.7 –திரு. வேலுச்சாமி

அ.சா.8 –மருத்துவர் திருமதி.பிரேம் நவாஸ்

அ.சா.9 – சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணராஜ்

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**:-

| வரிசை எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.10.2015 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 24.10.2015 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | 24.10.2015 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.4 | 23.10.2015 | அ.சா.1 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.5 | 24.10.2015 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 24.10.2015 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 21.10.2015 | படிவம் 91 |

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.30 18:15:38 +0530

**<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்</u>:-**

1. இரத்தக்கறை படிந்த கிழிந்த நிலையில் வெள்ளை கலரில் பச்சை, கருப்பு கலர் கட்டம் போட்ட அரக்கை சட்டை -1.

2. இரத்தக்கறை படிந்த கைக்கு அடிக்கமான கற்கள் - 2.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u>:- இல்லை**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரிகள் பிணையில் இருந்து வருகிறார்கள்.

2. வழக்கின் முடிவு காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

3. அரசு தரப்பு சாட்சிகளை மூன்று வாய்தாவிற்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

4.தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

N MOORTHY

Digitally signed by N MOORTHY
Date: 2026.06.30 18:15:44 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.